1979 மார்ச் 20]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அவதூறான செய்திகளை வேண்டுமென்றே பத்திரிகைகள் வெளியிடுமானால் அரசியல்வாதிகளுக்கு என்ன பாதுகாப்பு என்ற அடிப்படையில் எழுந்த கேள்வி இது. அதனால்தான் சட்டரீதியாகத் தடுக்க வேண்டுமென்ற முறையில் ஒரு மசோதா கொண்டுவரப்படும் என்று சொன்னேன். ஆங்காங்கே இப்படிப் பட்ட சில பிரச்சினைகள் எழுப்பப்படும்போது அவைகள் இந்த சட்டத்தின்படி இல்லாமல் போய்விடும் என்று நம்பு கிறோம்.

திரு. க. நாச்சிமுத்து : தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவரின் பத்திரிக்கையான முரசொலியிலும் தி.மு.க. நாளேடு களிலும், அலை ஓசை, இனமுரசு போன்ற பத்திரிகைகளிலும் மாண்புமிகு முதலமைச்சரைப் பற்றி அவதூறாக எழுதி வருவது அரசுக்குத் தெரியுமா ? (குறுக்கீடு) அந்தப் பத்திரிக்கைகள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(பதில் இல்லை.)

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, ஒரு பத்திரிகையில் தரக்குறைவாக எழுதப்படுகிறது. 'குஷன் மீசை கூத்தக்குடி சண்முகம், அரிவாள் மீசை அம்பிகா பதி' என்றெல்லாம் அழகாக எழுதிக் கொண்டிருக்கிறார்கள். குடித்தால், 6 மாதம் சிறைத் தண்டனை, வேலை நிறுத்தம் செய்தால் 6 மாதம் தண்டனை, ஆண் விபசாரம் செய்தால் 6 மாதம் சிறைத் தண்டனை என்று இருப்பதைப் போல தரக் குறைவான செய்திகளை வெளியிடுகின்ற பத்திரிக்கையாளர் களுக்கும் 6 மாதம் சிறைத் தண்டனை என்று மத்திய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 6 மாதம் கூட போதாது. ஒரு வருஷம் இருக்க வேண்டுமென்பது அரசின் விருப்பம்.

கொடைக்கானலைத் தனி மாவட்டமாக்கல்.

வினா எண் 482— திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்பு மிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

கொடைக்கானலைத் தனி மாவட்டமாக்கி மலைப் பிர தேசத்தை மேம்பாடு செய்யும் திட்டம் அரசு ஆலோசனையில் உள்ளதா ?

[1979 மார்ச் 20

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே கொடைக்கானலைத் தனி மாவட்டமாக்கி மலைப் பிரதேசத்தை மேம்பாடு செய்யும் திட்டம் அரசு ஆலோசனையில் உள்ளதா என்று மாண்புமிகு உறுப்பினர் பண்ணை சேதுராம் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். அதற்கு, இல்லை என்பது என்னுடைய பதில்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, நமது நாட்டில் பல்வேறு மாநிலங்கள் மொழி வழி அடிப்படையில் அமைந்து, தற்போது செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் மாநிலத்திலே அந்தந்த பகுதி மக்கள் வாழக்கூடிய கலாச்சாரம், நடையுடைப் பாவனைகள் அடிப்படையைக் கொண்டு, அதை ஒரே பகுதியாக அதாவது ஒரே விதமான கலாச்சாரம், நடையுடைப் பாவனைகளைக் கொண்ட மக்கள் வாழக்கூடிய பகுதிகளை ஒன்றாக இணைத்து செயல்படுத்தும் செயற் குறிப்பு இருக்கிறதா? அந்த அடிப்படையில் கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, பழனியையும் கரூரையும் கோவை மாவட்டத்தோடும் ஈரோடு மாவட்டத்தோடும் சேர்க்கும் திட்டம் இருக்கிறதா ?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, இது கொடைக்கானல் பற்றிய கேள்வியே தவிர கும்பகோணம் பற்றியதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொடைக்கானல் மேம்பாட்டு திட்டத்திற்கு வெஸ்டர்ன் காட் டெவலப்மென்ட் ஸ்கீமிலேயிருந்து இதுவரை என்னென்ன செய்திருக்கிறார்கள் ? இனிமேல் என்னென்ன செய்யப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வி மாவட்டத்தைப் இரண்டாக ஆக்குவது பற்றியது. ஆகவே என்னென்ன திட்டங்கள் என்பதற்கு தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஓட்டல்களில் உணவுப் பண்டங்களுக்கு வரி விதிப்பு.

வினா எண் 483— திரு. என். கிட்டப்பா : திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஓட்டல்களில் உணவுப் பண்டங்களில் விலையுடன் வரியையும் சேர்த்து வசூல் செய்வதைத் தடை செய்வது பற்றி அரசு ஆலோசித்து வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?